CSE

அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி,
கோவை -641 014.

**குறிப்பாணை எண் 1815 /இ1/2023/நாள் : 10.10.2023**

பொருள் : அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, கோவை - கல்வி உதவித்தொகை 2023-2024 ஆம் கல்வியாண்டு SC,ST ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ/ மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குவது - தொடர்பாக.

**********

இப்பயிலகத்தில் நடப்புக் கல்வியாண்டில் (2023-2024) முதலாமாண்டு மற்றும் நேரடி இரண்டாமாண்டு கல்வி பயிலும் ஆதி–திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ/மாணவியர்களுக்கு மேற்கண்ட ஆண்டிற்கான கல்வி உதவித் தொகை வழங்குவதற்கான **புதியது (Fresh)** மற்றும் **புதுபித்தல் (Renewal)** விண்ணப்பங்களை **www.gptccbe.co.in** என்ற கல்லூரி இணையதளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்து கொண்டு அதனைப் விடுதல்கள் ஏதுமின்றி பூர்த்தி செய்து வரும் **31.10.2023** -ம் நாளுக்குள் தவறாமல் அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்படுகிறது.

மேலும், மேற்கண்ட விண்ணப்பத்துடன் மாணவ/மாணவியர்கள் பெயரில ஏதாவது ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் கணக்குத் துவங்கி அதற்கான கணக்கு எண். **IFSC** எண் மற்றும் **MICR** எண் போன்றவைகளுடன் சமர்ப்பிக்க வேண்டும் மேலும் குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருப்பின் அதற்கான சான்றும் இணைத்து மேற்கண்ட நாளுக்குள் தவறாமல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க அறிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட நாளுக்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது எனவும் தெரிவிக்கலாகிறது.

**விண்ணப்பத்துடன் மாணவியர்/ மாணவர்கள் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்**

1). முதல் பட்டதாரியாக இருந்தால் அதற்கான சான்று (வட்டாட்சியர்)
2) வங்கி கணக்கு புத்தகம் (நகல் நாளது தேதியில் உள்ளபடி)
3) வருமான சான்று அசல் (Income certificate)
4) ஆதார் அட்டை நகல்
5) வருகை சான்று அசல்
6) இதற்கு முன்னர் பயின்ற பள்ளி மதிப்பெண்சான்று (நகல்)

(ஒம்) பூ.தேன்மொழி,
முதல்வர்

பெறுநர்

அனைத்துத் துறைத் தலைவர்கள்
தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.
(தங்கள் துறை மாணவ/மாணவியர்கள் மேற்கண்ட நாளுக்குள் விண்ணப்பங்களை பெற்று விடுபடாமல் பூர்த்தி செய்து அலுவலகத்திற்கு சமர்ப்பிப்பதை உறுதி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.)

நகல் : அறிவிப்புப் பலகை (கல்லூரி பிரதான கட்டிடம் மற்றும் விடுதி)
" கல்லூரி இணையதளம்